**21 கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்**

தன் அழைப்பை ஏற்று சித்தர் வராமையால், அபிஷேக பாண்டியன் அவரைக் காண தானே புறப்பட்டான். அன்று சங்கராந்தி. சோமசுந்தர்ரை தரிசித்து வலம் வருகையில் இறுமாப்புடன் வீற்றிருந்த சித்தரைக் கண்டு அவரது ஊரையும், பேரையும் கேட்டு அவருக்கு வேண்டுவது யாதுஎன்றும் கேட்டான் மன்னன்.

தாம் இருக்கும் தலம் இமயம் என்றும், பிச்சை எடுப்பவர்களே தம் சுற்றத்தார்கள் என்றும், **வித்தைகள்** பல செய்யும் சித்தர் தாம் என்று கூறினார். பாண்டியனிடம் தாம் பெறுவதற்குஒன்றுமில்லை என்று கூறி புன்னகைத்தார்.

சித்தரின் செருக்கைக் கண்ட பாண்டியன், வேளாளன் ஒருவன் கொண்டு வந்துக் கொடுத்த கரும்புஒன்றை சித்தரிடம் அளித்து, அதனை அருகிலிருக்கும் கல்யானையைக் கொடுத்து உண்ண வைத்தால், அவரை எல்லாம் வல்ல சித்தராகக் தான் ஏற்றுக் கொள்ள முடியும் என்றான். பின் அவர் கேட்பது எதுவானாலும் தான் அளிப்பதாக உறுதி கூறினான்.

மன்னனிடமிருந்து தனக்கு வேண்டுவது எதுவுமில்லை என்று கூறியபின், சித்தர் யானையை நோக்க, கல்யானையும் பிளறியபடி கரும்பை கடித்து ருசித்து தின்றது.

மீண்டும் சித்தர் யானையைக் கடைக்கண்ணால் பார்த்ததும், பாண்டியனது கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையை பறித்து விழுங்கிவிட்டது. மன்னன் சித்தர் மேல் கோபம் கொண்டான். சித்தரை அடிக்க வந்த மெய் காப்பாளர்களை நோக்கி நில்லுங்கள் என்று புன்னகைத்ததும் வீரர்கள் அப்படியே அசைவற்று நின்று விட்டனர்.

சித்தரின் ஆற்றலையுணர்ந்த அபிஷேக பாண்டியன், அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி மன்னிக்குமாறு வேண்டினான். அவரிடமிருந்து நற்புத்திரனை அடையவரம் பெற்றான். கல்யானையிடமிருந்து முத்துமாலையையும் திரும்பப் பெற்றான். அது சோமசுந்தரின் திருவிளையாடல் என அறியாது தான் அவரை சோதித்ததை எண்ணி வருந்தினான். பின்பு விக்கிரமன் என்னும் புதல்வனைப் பெற்று,

அவனுக்கு முடிசூட்டியபின் சிவலோகம் சேர்ந்தான் அபிஷேக பாண்டியன்.

**பல்லவி**

சித்த வேடம் தரித்த உன்னை சோதிக்க பாண்டியன் - கல்
யானைக்கு கரும்பளித்து வேண்டியதைக் பெறச் செய்தான்

**அனுபல்லவி**

சுத்தமாக யானையும் கரும்பைச் சுவைத்த பின்
மன்னன் முத்து மாலையையும் பறித்தே விழுங்கிற்று

**சரணம்**

தாக்க வந்தவர்களை நில்லுங்கள் எனச்சொல்லி - கை
தூக்க முடியாமல் செய்ததைக் கண்ட மன்னன்
நாக்குழற உன்னைத் தொழுது பணிந்த பின்
நன் மகன் விக்கிரமனையும் பெற்றிடச் செய்தாய்